**சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)**
**திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்**
**MCOP . No.242/2025**

**நாள் : 07.02.2026**

**ம.சா.** 1 (மனுதாரர் தரப்பில்) வது நபரின் வாக்குமூலம் (1959)–ம் ஆண்டின் 54 வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி.பத்மாசினி | மாவட்டம் | : | திருப்பத்தூர் |
| தந்தை / கணவர் பெயர் | : | திரு.லிங்கப்பன் | வயது | : | 53 |
| ஊர் | : | பச்சூர் | தொழில் | : | கூலி வேலை |
| வட்டம் | : | திருப்பத்தூர் | தேசியம் | : | இந்தியன் |

நான் இந்த வழக்கில் 1–ம் மனுதாரரும், விபத்தில் இறந்தவரின் தாயாருமாவேன். இந்த வழக்கிற்கான நிரூபண வாக்குமூலத்தை எனக்காகவும் இதர மனுதாரர்களுக்காவும் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டவை மற்றும் உண்மையானவை. அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான்.

1. முதல் தகவல் அறிக்கை நகல் – ம.சா.ஆ.1

2. பிரேத பரிசோதனை அறிக்கை நகல் – ம.சா.ஆ.2

3. மகேந்திரா பொலிரோ பிக் அப் வாகனத்தின் காப்பீடு பாலிசி நகல் – ம.சா.ஆ.3

4. மகேந்திரா பொலிரோ பிக் அப் வாகனத்தின் பதிவு சான்று நகல் – ம.சா.ஆ.4

5. மகேந்திரா பொலிரோ பிக் அப் வாகன ஓட்டுநரின் ஓட்டுநர் உரிமம் நகல் – ம.சா.ஆ.5

6. மகேந்திரா பொலிரோ பிக் அப் வாகனத்தின் தகுதி சான்று நகல் – ம.சா.ஆ.6

7. விபத்தில் இறந்தபோன சதிஷ்வார்மாவின் Provisional Certificate நகல் – ம.சா.ஆ.7

8. விபத்தில் இறந்துபோன சதிஷ்வார்மாவின் மாற்று சான்றிதழ் நகல்– ம.சா.ஆ.8

9. சதிஷ்வார்மாவின் கடவுச்சீட்டு அசல் (எண்ணிக்கை–2) – மா.சா.ஆ.9

10. சதிஷ்வார்மாவிற்கு Unicom Engineering PTE Ltd Singapore நிறுவனத்தில் வழங்கிய சம்பள பட்டியகள் நகல் (எண்ணிக்கை–12) – ம.சா.ஆ.10

11. சதிஷ்வார்மாவிற்கு LIANG & HOW CONTRACTOR PTE LTD, SINGAPORE நிறுவனத்தில் வழங்கிய சம்பள பட்டியகள் நகல் (எண்ணிக்கை–12) – ம.சா.ஆ.11

12. சதிஷ்வார்மாவிற்கு LIANG & HOW CONTRACTOR PTE LTD, SINGAPORE நிறுவனத்தில் வழங்கிய சம்பள பட்டியகள் நகல் – ம.சா.ஆ.12

13. சதிஷ்வார்மாவிற்கு LIANG & HOW CONTRACTOR PTE LTD, SINGAPORE நிறுவனத்தில் வழங்கிய சம்பள பட்டியகள் நகல் – ம.சா.ஆ.13

14. சதிஷ்வார்மாவிற்கு VISTEK PTE LTD SINGAPORE நிறுவனத்தில் வழங்கிய சம்பள பட்டியகள் நகல் (எண்ணிக்கை–2)– ம.சா.ஆ.14

15. சதிஷ்வார்மாவிற்கு Unicom Engineering PTE Ltd Singapore நிறுவனத்தில் வழங்கிய சம்பள பட்டியல் நகல் – ம.சா.ஆ.15

16. சதிஷ்வார்மாவின் சிங்கப்பூரில் உள்ள DSB Bank ல் பண பரிவர்த்தனை அறிக்கை நகல்– ம.சா.ஆ.16

17. சதிஷ்வார்மாவின் ஓட்டுநர் உரிமம் நகல் – ம.சா.ஆ.17

18. சதிஷ்வார்மாவின் ஆதார் அட்டை நகல் – ம.சா.ஆ.18

19. சதிஷ்வார்மாவின் இறப்பு சான்றதழ் நகல் – ம.சா.ஆ.19

20. வாரிசு சான்றிதழ் நகல் – ம.சா.ஆ.20

21. மனுதாரர்களின் ஆதார் அட்டை நகல் (எண்ணிக்கை–3) – ம.சா.ஆ.21

22. மனுதாரர்களின் வங்கி கணக்கு புத்தகம் நகல் (எண்ணிக்கை–3) – ம.சா.ஆ.22

**2–ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :**

விபத்தில் இறந்தவர் எனது மகன் என்றால் சரிதான். அவருக்கு திருமணம் ஆகவில்லை என்றால் சரிதான். 2, 3 மனுதாரர்கள் எனது மற்றொரு மகன் மற்றும் மகள் என்றால் சரிதான். விபத்திற்கு 11 வருடத்திற்கு முன்பே எனது கணவர் இறந்துவிட்டார். விபத்து சமயத்தில் எனது மகனின் வயது 31 என்றால் சரிதான். விபத்து சமயத்தில் எனது மகன் இருசக்கர வாகனம் ஓட்டிச்சென்றால் என்றால் சரிதான். விபத்து பச்சூர் டோல்கேட் – குப்பம் ரோட்டில் நடந்தது என்றால் சரிதான். விபத்து நடந்த சாலை பிரதான தார் சாலை என்றால் சரிதான். விபத்து நடந்த சாலையை கடப்பதற்கான இடைவெளி அங்கிருந்தது என்றால் சரிதான். எனது வீடு பச்சூர் அருகே பாழையப்பேட்டை குழிகான் வட்டத்தில் உள்ளது. நாட்றம்பள்ளியில் இருந்து எனது வீட்டிற்கு வர சாலையை கடந்து தான் வர வேண்டும் என்றால் சரிதான். அந்த மாதிரியாக சாலையை கடக்கும் போது தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். எனது மகன் வாகனங்கள் வருவதை கவனித்து ஓட்டியிருந்தால் விபத்தை தவிர்த்திருக்கலாம் என்றால் சரியல்ல. மேற்படி வாகனத்தை எனது மகன் முருகன் என்பவரிடமிருந்து வாங்கியிருந்தார் என்றால் சரிதான். எனது மகனின் பெயருக்கு பதிவு மாற்றம் செய்யப்பட்டதா ? என்றால் எனக்கு தெரியாது. எனது மகன் தலையில் அடிப்பட்டது இறந்தார் என்றால் சரிதான். எனது மகன் தலைக்கவசம் அணிந்து பயணித்திருந்தால் உயிர் அபாயத்தை தவிர்த்திருக்கலாம் என்றால் சரியல்ல. ஹெல்மேட் அணிந்திருந்தார். எனது எனது மகன் சரியான முறையில் பெல்ட் போட்டு தலைக்கவசம் அணிந்து பயணிக்காததால் தான் தலைக்காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். எனது மகன் சிங்கப்பூரில் 2023 மார்ச் மாதம் வரை வேலை பார்த்தார். எனது மகளுக்கு மாப்பிளை பார்த்துக்கொண்டிருந்ததால் தான் 3 மாத விடுப்பில் தான் வந்தார். எனது மகன் சிங்கப்பூருக்கு திருப்பி செல்வதற்கு ஆயுத்தமான பணி விசாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது மகன் Unicom Engineering Pvt Ltd நிறுவனத்தில் பணி செய்து வந்தார். LIANG & HOW CONTRACTOR PTE LTD கான்ட்ராக்ட் நிறுவனத்தில் பணி புரிந்து வந்தார் என்றால் சரிதான். எனது மகன் B.Sc (CS) படித்திருந்தார். Unicom Engineering Pvt Ltd நிறுவனத்தில் பணி நியமன

ஆணை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். System வேலை செய்துக் கொண்டிருந்தார். பணி நியமன ஆணை இருந்தால் மட்டுமே பணி விவரம் தெரியவரும் என்றால் சரிதான். அதேபோல் LIANG & HOW CONTRACTOR PTE LTD நிறுவனத்திலும் System வேலை செய்துக் கொண்டிருந்தார். பணி நியமன ஆணை இருந்தால் மட்டுமே பணி விவரம் தெரியவரும் என்றால் சரிதான். பணி நியமன ஆணை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கடைசியாக ஊருக்கு வருவதற்கு முன்பு Unicom Engineering Pvt Ltd நிறுவனத்தில் மறுபடியும் வேலைக்கு சேர்ந்ததற்கான பணி நியமன ஆணை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது மகன் சிங்கப்பூரிலிருந்து பணி காலம் முடிந்துவிட்டதால் தான் ஊருக்கு வந்துவிட்டார் என்றால் சரியல்ல. அதனால்தான் மீண்டும் பணிக்கு செல்வதற்கான விசாவை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது மகன் Unicom Engineering Pvt Ltd நிறுவனத்தில் நிரந்தர வேலையில் இல்லை என்றால் சரியல்ல. எனது மகன் வருமான வரி செலுத்தினாரா ? என்பது எனக்கு தெரியாது. எனது மகன் மீண்டும் வெளி நாட்டிற்கு சென்று பணி செய்யவதற்கான விசா அல்லது பணி ஆனை தாக்கல் செய்யாததால் முந்தைய பணியின் அடிப்படையில் எதிர்கால வருமான இழப்பு கோர இயலாது என்றால் சரியல்ல. நான் பல்வேறு தலைப்புகளின் கீழ் கோரியுள்ள தொகை மிகைப்படியானது என்றால் சரியல்ல. விபத்திற்கு எனது மகனின் கவனக்குறைவும் காரணம் என்பதால் அவரது அஜாரக்கதையை பொருத்தமட்டில் வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டியது என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் 1−ம் எதிர்மனுதாரர் ஓட்டுநருக்கு உரிய ஓட்டுநர் உரிமம் (பொதுப்பணி வில்லை) இல்லை என்பதால் எனது மகனின் இறப்பிற்கு உண்டான இழப்பீட்டினை 1−ம் எதிர்மனுதாரர் மட்டுமே செலுத்த கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. 2−ம் எதிர்மனுதாரருக்கு எதிரான வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

**நீதிமன்ற அனுமதியுடன் மறுவிசாரணை :**

விபத்தை நான் நேரில் பார்க்காததால் விபத்து நடந்த விதம் பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

**மறு குறுக்கு விசாரணை இல்லை.**

**1−ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :**

விபத்து சமயத்தில் 1−ம் எதிர்மனுதாருக்கு ஓட்டுநர் உரிமம் இருந்தது என்றால் சரிதான். அந்த உரிமம் LMV என்ற தெளிவுப்படுத்தப்பட்டது. அதேபோல் 1−ம் எதிர்மனுதாரருக்கு Badge இல்லை என்றும்

தெளிவுப்படுத்தப்பட்டது. அவ்வாறு Badge இல்லை என்றாலும் 2–ம் எதிர்மனுதாரர் நஷ்ட ஈடு கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரிதான்.

**2–ம் எதிர்மனுதாரர் தரப்பில் கேட்டுக்கொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணை :**

திருத்தப்பட்ட மோட்டார் வாகன சட்டப்படி முறையான ஓட்டுநர் உரிமம் இல்லாத நிலையில் காப்பீட்டு நிறுவனம் ஈட்டுறுதி ஏற்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல.

ஒம்/. J. நாகலட்சுமி @ விஜயராணி,
சிறப்பு சார்பு நீதிபதி (MACT),
திருப்பத்தூர்.